பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 3-50

UTHAYAN

சுடர்: 5 பிரமோதூத ஹு ஐப்பசி மீ 21 உ புதன்கிழமை (07 - 11 - 1990) ஹிஜ்ரி 1410 ற. ஆகிர் 18 கதிர் 245

# ஆஸ்பத்திரி வலயத்தைச் சூழ பாதுகாப்புப் பகுதி பிரகடனம்

## ராணுவ செயற்பாடுகளுக்குத் தடை

யாழ்ப்பாணம், நவம்பர் 7

யாழ் போதனா ஆஸ்பத்திரியின் பாதுகாப்பைச் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு நேற்று உத்தியோகபூர்வமாகப் பொறுப்பேற்றது. அதனை அடுத்து ஆஸ்பத்திரி அமைந்துள்ள பிரதேசம் ''ஆஸ்பத்திரி வலயம்'' ஆகவும்; அதைச் சூழவுள்ள குறிப்பிட்ட ஓர் எல்லைப் பிரதேசம் ''பாதுகாப்புப் பகுதி'' ஆகவும் பிரகடனப் படுத்தப்பட்டிருக்கின்றன.

ஆஸ்பத்திரி வலயத்திலும் பாதுகாப்புப் பகுதியிலும் இராணுவச் செயற்பாடுகளுக்கு முற்றாகத் தடை விதிக்கப்பட்டிருக்கிறது

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவினால் வெளியிடப்பட்ட ஆஸ்பத்திரி சம்பந்தமான ஒழுங்கு விதிகளில் இவ் விவரம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த ஒழுங்கு விதிகளில்—

செ. ச. சர்வதேசக் குழு வெளியிட்டிருக்கும் ஒழுங்கு விதிகளைச் சம்பந்தப்பட்ட எல்லோரும் கடைப்பிடிக்க வேண்டும். இவை யுத்தம் நடக்கும் சூழ்நிலைகளில் சர்வதேசரீதியாக ஏற்றுக் கொள்ளப்பட்டவை.—

இந்த ஒழுங்கு விதிகளை அரசாங்கத்துக்கும், விடுதலைப் புலிகளுக்கும் அறிவித்துள்ளோம். அவை 6-11-90 முதல் நடைமுறைக்கு வந்துள்ளன.—

இந்த விதிகளை கடுமையாகவோ அல்லது தொடர்ந்தோ எத்தரப்பார் மீறினும் செ. ச. ச. குழு ஆஸ்பத்திரிப் பாதுகாப்புக்குப் பொறுப்பு என்ற நிலையிலிருந்து ஒருதலைப் பட்சமாகவே வாபஸ்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## பாதுகாப்புப் பகுதியின் எல்லைகள் பற்றிய விவரம்

யாழ்ப்பாணம், நவ 7

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வலயத்தைச் சுற்றி உருவாக்கப்பட்டிருக்கும் பாதுகாப்புப் பகுதியின் எல்லைகளை பற்றிய வரைபடம், செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவினால் நேற்றுப் பத்திரிகைகளுக்கு வெளியிடப்பட்டது.

பாதுகாப்புப் பகுதியின் எல்லைகள், வீதிகள் வழியாக மட்டுமன்றி தனியார் வளவுகளையும் ஊடறுத்துச் செல்லும் விதத்தில் உள்ளது.

ஒவ்வொரு திக்கிலும் வெவ்வேறு நீள, அகலங்களுடன் ''அந்தசந்தம்'' இல்லாத விதத்தில் பாதுகாப்புப் பகுதியின் தோற்றம் அமைந்துள்ளது.

ஆஸ்பத்திரியிலிருந்து ஆகக் கூடியது 500 மீற்றரும், ஆகக் குறைந்தது 250 மீற்றருமாக பாதுகாப்புப் பகுதியின் எல்லைகள் அமைந்துள்ளன.

பாதுகாப்புப் பகுதியின் எல்லை விவரம் கீழே தரப்பட்டுள்ளது.

வாசகர்கள் எல்லைகளை இலகுவில் விளங்கிக்கொள்ளும் விதத்தில் எல்லை போடு

[4 ஆம் பக்கம் பார்க்க]

## ஆஸ்பத்திரியைச் சுற்றி செஞ்சிலுவைக் கொடிகள்

யாழ். போதனா ஆஸ்பத்திரியை நேற்று மாலை 5 மணிக்கு செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு பொறுப்பேற்றது. வைத்தியசாலையில் உயர்ந்த கட்டடமான மகப்பேற்று வார்ட்டின் கூரையில் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு கொடி பறக்கவிடப்பட்டுள்ளது.

வைத்தியசாலையை அடையாளம் காட்டும் வகையில் உயர் கட்டடங்களில் பத்து சிவப்பு விளக்குகள் (லைற்றுகள்) வைக்கப்பட்டுள்ளன.

ஆஸ்பத்திரியைச் சுற்றி பிரகடனப்படுத்தப்பட்ட பாதுகாப்புப் பகுதி எல்லைகளில் வெள்ளைக்கொடிகள் பறக்கவிடப்பட்டுள்ளதுடன், அருகே சிவப்பு விளக்குகளும் எரியவிடப்பட்டுள்ளன.

ஆஸ்பத்திரியில் செ. ச. ச. குழுவின் பிரதிநிதி ஒருவர் தங்கியுள்ளார். செஞ்சிலுவைத் தொண்டர்களும் அங்கு கடமையில் உள்ளனர்.

(அ-3-5)

## பணிப்பாளரின் பொறுப்பில் ஆஸ்பத்திரி நிர்வாகம்

யாழ்ப்பாணம், நவ. 7

யாழ்-போதனா ஆஸ்பத்திரிக்கும், நோயாளர்களுக்கும், ஊழியர்களுக்கும், கட்டடங்களுக்கும், உபகரணங்களுக்கும் பாதுகாப்பு வழங்குவதுதான் எமது பொறுப்பு. ஆஸ்பத்திரி நிர்வாகம் பணிப்பாளரிடமே இருக்கும்.''

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு அதிகாரி திரு: ஜோர்ஜ் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ் போதனா வைத்தியசாலை பொறுப்பேற்றமை குறித்து அவர் நேற்று நடத்திய செய்தியாளர் மாநாட்டில் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்த ஏனைய

[4 ஆம் பக்கம் பார்க்க]

## மல்லாகம் - குளமன்காலில் இரவு நேரக் குண்டு வீச்சு

### வீடுகள் சேதம்; பலர் காயம்

மல்லாகம், நவ. 7

மல்லாகம், குளமன்கால் — நீதிமன்ற வீதியில் நேற்றுமுன்தினம் (திங்கள்) இரவு 8.30 மணியளவில் பொம்மர்கள் குண்டுவீச்சுத் தாக்குதல்களை நடத்தின.

மல்லாகம் மயானப் பகுதியில் நடத்தப்பட்ட குண்டு வீச்சில் வீடுகள் சேதமடைந்தன. அருகிலுள்ள வைரவர் கோவிலும் சேதமானது.

குண்டு வீச்சு நடந்தபோது மயானத்தில் பிரேதம் எரிந்து கொண்டிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

குண்டு வீச்சில் ஒரு தாயும் அவரது இரு பிள்ளைகளும் மற்றும் சிலரும் சாயமடைந்தனர்.

புஷ்பவதி சிவப்பிரகாசம் (34 வயது). அவரது பிள்ளைகளான பிரியதர்ஷினி (10 வயது), நிஷாந்த பிரசாத் (6 வயது) மற்றும் தேவதாஸ் தாட்சாயினி (16 வயது), யேசு

[4 ஆம் பக்கம் பார்க்க]

### ஊரடங்கு நீக்கம்

கொழும்பு, நவ 7

மன்னார் மாவட்டத்தில் அமுல் நடத்தப்பட்டு வந்த ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்டு விட்டதாக கொழும்பில் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. (ஒ-எ)

## அனலைதீவு நோக்கிச் சென்ற படகுகள் மீது கடற்படை தாக்கு; 30 பயணிகளின் கதி தெரியாது

புளியங்கூடல், நவ. 7

அனலைதீவு, எழுவைதீவு நோக்கிச் சென்ற இரு மோட்டார் படகுகள் மீது நடுக்கடலில் வைத்து கடற்படையினர் சரமாரியான துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். படகுகளில் பிரயாணம் செய்த பயணிகளுக்கு என்ன நடந்தது என்பது தெரியவில்லை

இந்த இரு படகுகளிலும் ஆண்களும், பெண்களுமாக சுமார் 30 பயணிகள் பயணம் செய்தனர் என்றும் —

அனலைதீவு ப. நோ. சங்கக் கிளைக்குரிய அரிசி, சீனி, மா 80 மூடைகளும், 2 பரல் தேங்காய் எண்ணெய், வெங்காயம் போன்றவையும் இருந்தன என்றும் தெரிவிக்கப்பட்டது.

கடந்த வெள்ளிக்கிழமை கவில் துறையில் இருந்து இந்த இரு படகுகளும் புறப்பட்ட அரை மணி நேரத்தில் இந்தத் தாக்குதல் சம்பவம் நடைபெற்றதாகத் தெரிய வருகிறது.

பீரங்கி, மற்றும் துப்பாக்கித் தாக்குதல்களை நடத்தி. பிரயாணிகள் படகுகள் சுற்றி வளைக்கப்பட்டு, அவற்றில் பயணம் செய்தவர்கள் அனைவரும் படையினரால் கூட்டிச் செல்லப்பட்டதாக கரையோரப் பகுதியில் இருந்து சம்பவத்தை அவதானித்த மீன

[4 ஆம் பக்கம் பார்க்க]

### ஆலயத்துக்கு பின் புறத்தில் ஷெல்

மல்லாகம், நவ 7

திங்கட்கிழமை அதிகாலை 5 மணியளவில் தெல்லிப்பழை காசிப்பிள்ளையார் ஆலயத்தின் பின் புறத்தில் ஷெல் விழுந்து வெடித்தது.

இதனால் இந்தப் பகுதியிலுள்ள வீடுகள் சேதமடைந்தன. ஷெல் சிதறல்கள் நாலாபுறமும் சிதறிச் சிறிப் பாய்ந்தன.

அப்போது தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்

கண்ணில் காயமடைந்தனர்.

(ஒ-86)

## 3 ஆம் தவணை விடுமுறை பத்து நாட்கள் மட்டுமே!

யாழ். மாவட்டத்தில் தற்போது நடைபெறும் பாடசாலைகள் எதிர்வரும் டிசம்பர் 22 ஆம் திகதி வரை இயங்கும்.

மூன்றாம் தவணை விடுமுறைக்காகப் பாடசாலைகள் டிசம்பர் 23 ஆம் திகதி மூடப்பட்டு மீண்டும் ஜனவரி 2 ஆம் திகதி பாடசாலைகள் ஆரம்பமாகும்.

1990 ஆம் ஆண்டுக்கான வகுப்பேற்றப் பரீட்சைகள் ஜனவரி 21 ஆம் திகதி முதல் நடைபெறும்.

யாழ். பிராந்திய கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் பாடசாலைகளுக்கு அனுப்பி வைத்துள்ள சுற்று நிருபம் ஒன்றில் இந்த விவரம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (உ-3)

## சந்திரசேகர் புதிய பிரதமர்?

புதுடில்லி, நவ. 7

ஜனதா தள் கட்சியிலிருந்து பிரிந்து சென்று 'ஜனதா தள் சோஷலிஸ்ட் கட்சி'யை உருவாக்கியிருக்கும் திரு. சந்திரசேகரின் தலைமையில் புதிய அரசாங்கம் ஒன்றை அமைக்க இந்திரா காங்கிரஸ் முழு ஒத்துழைப்பு வழங்கும். நேற்று நள்ளிரவு இவ்வாறு உத்தியோக பூர்வமாக நிஅவிக்கப்பட்டது.

நேற்று இரவு நடைபெற்ற இந்திரா காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

இந்த முடிவை அடுத்து சந்திரசேகர் இந்தியாவின் புதிய பிரதமராவதற்கு வாய்ப்பு ஏற்பட்டிருப்பதாக அவதானிகள் தெரிவித்தனர். (உ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள சிங்கர் குளிர்சாதனப் பெட்டி விற்பனைக்குண்டு. தொடர்பு பவசிங்கம், பிரம்படி லேன், கொக்குவில். (14649)

புதிய National Colour T.V TC-2186 MR, Sumeet Kitchen Machine SP - 16 Electronic தீர்வையற்ற [Duty Free] விலைக்கே விற்பனைக்குண்டு. தொடர்பு Paradise Shop, வேம்படி, வல்வெட்டித்துறை. [14643]

நத்தார், புதுவருட வாழ்த்துக்களை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். (வியாபாரிகளுக்கு விஷேட கழிவுண்டு) "மண்டேலா ரேடர்" இல. 256A, பருத்தித்துறை வீதி, நல்லூர் யாழ்ப்பாணம். [14550]

## நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

Rhodesian Ridgdack 2 மாத குட்டிகள் உடன் விற்பனைக்கு உண்டு நல்லூர் பாம்சென்றர் 19 முருகேசர் ஒழுங்கை முத்திரைச்சந்தி நல்லூர். (14647)

## அல்டி (ALDI)

நவீன் கைக்கடிகாரங்கள் சுவர் மணிக்கூடுகள், மணிக்கூடு பற்றறிகள் நியாய விலையில் பெற்றுக்கொள்ளவும். உங்கள் மணிக்கூடுகளை நல்ல முறையில் திருத்திக்கொள்ளவும் யாழ்நகரில் சிறந்த ஸ்தாபனம் 'அல்டி' 269/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். ஏற்கனவே மணிக்கூடு திருத்தத் தந்தவர்கள் 10 ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுக்கொள்ளவும். யாழ் நகரில் 'அல்டி' ஓர் நம்பிக்கையான ஸ்தாபனம். (சி.5379)

## பொது அறிவு, பாலர் தமிழ்

எழுது வினைஞர்களுக்கான போட்டிப் பரீட்சைக்குரிய பொது அறிவு [புதிய பதிப்பு] ரூபா 46/- சீர்திருத்த எழுத்துக்களுடன் பாலர் தமிழ் [வண்ணப் பதிப்பு] ரூபா 12/- ஆட்பேப்பரில் ரூபா 15/- அஷ்டலக்ஷ்மி வெளியீட்டகம் கைதடி. (14631)

## மணமகள்தேவை

அவுஸ்திரேலியாவிலுள்ள வேளாள றோமன் கத்தோலிக்க 38 வயதுடைய வருக்குப் படித்த ஆங்கில அறிவுடைய அழகுள்ள மணமகள் தேவை. அவுஸ்திரேலியாவிலுள்ளவர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும். C/o 153 உதயன் யாழ்ப்பாணம். (14646)

27 வயதிற்குட்பட்ட வெளிநாடு செல்லக் கூடிய பிராமண குல மணமகள் தேவை. நேரில் தொடர்பு கொள்ளவும்: திருமதி இராசரத்தின ஐயர் 'மங்களபதி' பண்டாரக்குளம் பிள்ளையார் கோவிலடி, 41/5, அரசவீதி, நல்லூர். [14650]

## கிளீன் கட் போட்டோஸ்ரற்

தெளிவான போட்டோஸ்ரற் பிரதிகளை உடனடியாகப் பெற்றுக் கொள்ளவும் அடையாள அட்டைகட்கு கவரிட்டுக் கொள்ளவும் கிளீன் கட் 37, சிவகுருநாதர் வீதி, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் யாழ். இந்து மகளிர் சந்திக்கு அண்மையில். (சி-5355)

## வைத்திய சேவை

Dr. C. C. S. ராஜன் கிருஷ்ணா வைத்திய நிலையம், மார்க்கட் சந்தி, நாவாந்துறைக்கு மாற்றப்பட்டுள்ளது. (14638)

# அதிக விளைச்சலுக்கு

NEEMIA FERTILISER



நீமியா உரம்

A MILKWHITE PRODUCT

கிலோ பைக்கற் ஒன்று ரூபா 5.00
25 கிலோ கொண்ட பைக்கற்றும் உண்டு
மொத்தக் கொள்வனவுக்கு
விசேட சகாயவிலை.

## - மில்க்வைற் யாழ்ப்பாணம்

[சி-5376]

## St. Patrick's College, Jaffna
## பெற்றோரின் கவனத்திற்கு

1ஆம் ஆண்டு தொடக்கம் 13ஆம் ஆண்டு மாணவர்களுக்கு வகுப்புகள், பல இடையூறுகள் மத்தியிலும், மிகவும் ஒழுங்காக நடைபெறுகின்றன. இவ் வகுப்புகளிலும், மதிப்பீட்டுப் பரீட்சைகளிலும் பங்குபற்றாதவர்கள் கல்வியாண்டு இறுதியில் வகுப்பேற்றத்திற்கு தகுதியற்றவர்களாவர்.

– RECTOR.

[சி-5378]

## புதிய உயர் கல்லூரி

யாழ்ப்பாணம்

★ 10-11-1990 மீண்டும் ஆரம்பம் ★

★ 90, 91. 92 A/L கலை, வர்த்தக வகுப்புக்கள்
★ 90, 91, G. A. Q. வகுப்புக்கள்
★ 90, 91, B. A. வகுப்புக்கள்

யாவும் அன்றைய தினம் ஆரம்பமாகும்.

10-11-90 (சனிக்கிழமை) காலை 8.00 மணிக்கு எமது நிலைய மாணவர்கள் அனைவரையும் சமுகமளிக்குமாறு வேண்டுகின்றோம்.

நிர்வாகி,
திருமதி எஸ். அருள்நங்கை.

[சி-5380]

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்:
21 - 08 - 1915



மறைவு:
07 - 10 - 1990

அமரர்
### சின்னத்தம்பி துரையப்பா

அன்னாரின் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் வாடும்:
மனைவி, மக்கள், பேரப்பிள்ளைகள்,

கௌரி ரவல்ஸ்,
புகையிரத வீதி,
சுன்னாகம். (12648)

கட்டைவேலி - நெல்லியடி
ப. நோ. கூ. சங்கம்
(மட்டுப்படுத்தப்பட்டது)

## பதவி வெற்றிடம்

### பொது முகாமையாளர்

எமது சங்கத்திற்கு அமைய அடிப்படையில் பொது முகாமையாளர் பதவிக்கு ஒருவர் உடனடியாகத் தேவை. இவரது சேவைக்காலம் ஒரு வருடத்துக்கு உட்பட்டதாக இருக்கும்.

**தகைமைகள்:**

1. கூட்டுறவுத் துறையில் 10 வருடத்திற்குக் குறையாத அனுபவமுடையவர்.

அல்லது

2. 10 வருடங்களுக்குக் குறையாமல் சேவையாற்றியுள்ள முன்னாள் கூட்டுறவுப் பரிசோதகர்.

**பிற தகைமைகள்:**

சங்கத்தை திறம்பட நடத்தக் கூடியவராகவும், சேவை மனப்பான்மை மிக்கவராகவும், கூட்டுறவு முகாமைத்துவ துறையில் சிறப்புத் தேர்ச்சி பெற்றவராகவும் இருத்தல் வேண்டும்.

**வேதனம்:**

நேரில் பேசித் தீர்த்துக்கொள்ளப்படும். தனியான ஒப்பந்தம் மூலம் சேவை நிபந்தனைகளும் ஏனைய விடயங்களும் முடிவு செய்யப்படும்.

விண்ணப்பதாரர் சங்க எல்லைப் பரப்பினுள் வசிப்பவராக இருத்தல் விரும்பத்தக்கது. விண்ணப்பங்கள் யாவும், "தலைவர், கட்டைவேலி - நெல்லியடி ப. நோ. கூட்டுறவுச் சங்கம், கரவெட்டி" என முகவரியிடப்பட்டு, 20 - 11 - 90 க்கு முன்னர் பதிவுத் தபால் மூலமாகவோ அன்றி நேரிலோ கையளித்தல் வேண்டும். விண்ணப்பம் அனுப்பும் தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் "அமைய பொது முகாமையாளர் பதவிக்கான விண்ணப்பம்" எனக் குறிப்பிட்டிருத்தல் வேண்டும்.

சி. தங்கத்துரை
தலைவர்,
கட். நெல். ப. நோ. கூ. சங்கம்.

கரவெட்டி,
03 - 11 - 90

[சி-5377]

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

### ச. அ. செபரத்தினம்

(ஓய்வு பெற்ற அஞ்சற் பரிசோதகர், முன்னாள் பண்டத்தரிப்பு பிரசைகள் குழுத் தலைவர்)

தோற்றம்: 17 - 07 - 1928

மறைவு: 07 - 11 - 1988

அன்புக்கோர் பிறப்பிடமே செபரத்தினமே
அரவணைத்தே எல்லார்க்கும் உதவி நின்ற
இன்சொல்லின் விளைநிலமே, உண்மை, நேர்மை
ஈகையெனும் பண்புகளால் உயர்ந்த செல்வா
மின்னலெனக் குண்டுபட்டு மறைந்தாயே! ஐயா
மேதினியில் நின் நினைவு மறக்கப்போமோ?

அன்பு மறவாத பிரிவால் துயரும்,
அருமை மனைவி தவம், ஏகபுதல்வி: ஆனந்தி,
மைந்தர்கள்: குமார், சின்னோய், சத்தி, அமுதன்;
மற்றும் உற்றார், உறவினர், நண்பர்.

பண்டத்தரிப்பு. (14701)

## மரண அறிவித்தல்

### திருமதி தனலக்ஷ்மி நமசிவாயம்

(இளைப்பாறிய ஆசிரியை)

சண்டிலிப்பாயை பிறப்பிடமாகக் கொண்டவரும், இளைப்பாறிய ஆசிரியையுமான திருமதி தனலக்ஷ்மி நமசிவாயம் 1 - 11 - 90 இல் கொழும்பில் காலமானார். இவர் காலம் சென்ற வைத்திய கலாநிதி நமசிவாயத்தின் அன்பு மனைவியும், காலம் சென்ற திரு. திருமதி செல்லத்துரையின் அன்பு மகளும், காலம் சென்ற இரத்தினலிங்கத்தின் அன்புச் சகோதரியும், இராஜகுமார் (லண்டன்), ரஜனி, பத்மினி (லண்டன்), சிறிகுமார் (அமெரிக்கா), நளினி, ஆனந்தக்குமார் (ஜேர்மனி), ரமணி, சூரியகுமார் (கனடா), ஆகியோரின் அன்புத்தாயாரும், ஜெகதீஸ்வரி [லண்டன்] விஜயரட்ணம் (High ways), குணசீலன் (லண்டன்), சிவகுமார் (S.N.K. Trading Co உரிமையாளர்), அருளேஸ்வரி (ஜேர்மனி), Dr. துஷ்யந்தகுமார் ஆகியோரின் அன்பு மாமியாரும் சுஜந்தன், விரோஷனி, சுஜானி, ஜலந்தரை, ஜலாணி, கிருத்திகா, சாரங்கா, பிரியன் ஆகியோரின் அன்புப் பேத்தியுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 5 - 11 - 90 ல் கனத்தை மயானத்தில் நடைபெற்றது. இதனை உற்றார், உறவினர்களுக்கு அறியத் தருகின்றோம்.

தகவல்:
திருமதி நளினி சிவகுமார்,
திருமதி ரமணி துஷ்யந்தகுமார்.

225/1, கிருள வீதி,
கொழும்பு. [14702]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### சிறிய கேள்வி!

யாழ்ப்பாண மாவட்டத்தில் அரசாங்க உதவிப் பணம்(தர்மப் பணம்)பெறும் ஆயிரக்கணக்கான ஏழை மக்களுக்கு கடந்த ஐந்து மாத காலமாக அது கிடைக்கவில்லை. அதனால் அவர்கள் படும் துயரமும், துன்பமும், கஷ்டங்களும் சொல்லும் தரமன்று.

கடந்த மாதம் இல்லாவிடினும் இந்த மாதம் பணம் வந்திருக்கலாம் என எதிர்பார்த்து ஏழைகள் பலரும் தபாலகங்களுக்கு அடிக்கடி சென்று அலைகிறார்கள்; ஏமாற்றம் அடைகிறார்கள். பணவசதி, வருவாய் உள்ளவர்களாலேயே சமாளிக்க முடியாத அளவுக்கு உணவுப்பொருள்களின் விலைகள் உயர்ந்துள்ளன. இந்நிலையில் பிள்ளைகுட்டிகள் உள்ள ஏழைகள் என்ன செய்வது? அரை வயிற்றுக் கஞ்சிக்கும் வழியில்லாமல் வாடுகிறார்கள். எங்களின் நிலை குறித்து அக்கறைப்படுவார் எவரும் இல்லையா? —என்று நல்லூரைச் சேர்ந்த அன்பர் ஒருவர் உதயனுக்கு எழுதியிருக்கிறார்.

அவரின் கேள்விக்குச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தந்த பதிலை நேற்றைய உதயனில் வெளியிட்டோம். தர்மப் பணம் வழங்க மாதாந்தம் 19 லட்சம் ரூபா தேவை. கொழும்பிலிருந்து பணம் வந்தால் மட்டுமே தர்மப் பணத்தை வழங்க முடியும். அதற்கான முயற்சியில் இப்போது கொழும்பு சென்றிருக்கும் அரச அதிபர் ஈடுபட்டிருக்கிறார்.

உத்தியோக ரீதியாக நியாயப்படுத்தக் கூடிய பதில்! ஆனால் மனிதாபிமான ரீதியில்...?

எல்லா விடயங்களிலும் உத்தியோக பூர்வமாக நியாயப்படுத்திக் கொண்டு நிர்வாகம் செய்யமுடியாது. குறிப்பாக மக்களுக்குச் சேவை புரியும் அரசாங்க அலுவலகங்களில் உள்ள அதிகாரிகள் திருப்தியான பதிலைக் கூறும் நிலை இருப்பின் தங்களிடம் தவறில்லை என்று காட்டித் தப்பிக் கொள்ளக் கூடாது. தக்க பதில் உண்டானால் தம்மிடம் தப்பில்லை என்று எண்ணிக் கருமம் ஆற்றக் கூடாது.

தாங்கள் செய்யும் மக்களுக்குரிய கடமையில், மனிதாபிமானம், மனித நேயம் என்பவற்றையும் சேர்த்துப் பார்க்க வேண்டும். ஒழுங்கு விதிகளுக்கும், நிர்வாகக் கோவைகளுக்குள்ளும் மட்டுமே நின்று குண்டுச் சட்டிக்குள் குதிரை ஓடக்கூடாது,

ஏழைகள், வசதி குறைந்தோர், அவலப்படுவோர், பாதிக்கப்பட்டோர், ஊனமுற்றோர், நோயாளர் சம்பந்தப்பட்ட அலுவல்களில் மனிதாபிமான அணுகுமுறையைக் கடைப்பிடிக்க வேண்டும். ஆனால் எமது உள்ளூர் அதிகாரிகள் பலரிடம் அது இருப்பதாகத் தெரியவில்லை. இருந்திருப்பின் .........

எப்படியோ பாடுபட்டு, என்னென்னவோ எல்லாம் செய்து, அரசாங்க ஊழியர்களுக்கு மாதாந்தம் சம்பளம் வழங்கப்படுகிறது தானே......? அது முடியும் என்றால், மனம் வைத்தால், மனித நேயம் இருந்தால் ஏழைகளின் தர்மப் பணத்துக்கு முன்னுரிமை கொடுத்து ஒரு மாதத்துக்காவது வழங்கி இருக்கலாம் அல்லவா?

இந்தச் சிறிய கேள்விக்கு என்ன பதில்,? — எங்கள் உள்ளூர் அதிகாரிகளே!

# முதலாம் தர அதிபர்களாக 30 பேர்

# யாழ். மாவட்டத்தில் தெரிவாகினர்

யாழ்ப்பாணம், நவ. 7

யாழ். மாவட்டத்தில் முப்பது பேர் முதலாம் தர அதிபர்களாக நியமனம் பெற்றுள்ளனர். இவர்கள் 01-06-89 முதல் முதலாம் தர அதிபர்களாக நியமனம் பெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களின் சுயவிவரக் கோவைகள் பரிசீலிக்கப்பட்டு நியமனங்கள் விரைவில் வடபிராந்திய கல்விப் பணிப்பாளரால் வழங்கப்படும்.

முப்பது பேரினதும் பெயர், பாடசாலை விவரங்கள் வருமாறு:-

ஜனாப் எம். எப் யுனிதா - கதீஜா ம. வி, திருமதி சரஸ்வதி ஜெயராசா - முத்துத்தம்பி ம. வி, திரு. ஜே. யோன்பிள்ளை - இராமநாதன் ம. வி., மிருசுவில், திரு. எம். சின்னத்தம்பி - யாழ். இந்துக்கல்லூரி, திரு. எஸ். செல்வராசா - அராலி இந்து வித்தியாலயம், திருமதி எஸ். தனஞ்சயன் - யாழ். இந்துமகளிர் கல்லூரி, திருமதி பி. எப். சின்னத்துரை - திருக்குடும்ப கன்னியர் மடம் ம. வி., திரு. எஸ். சண்முகலிங்கம் - சுழிபுரம் வடக்கு ஆறுமுகம் வித்தி., திரு. சி. என். சத்தியநாதன் - சைதடி முத்துக்குமாரசாமி வித்தி, சிஸ்டர். யோலன் மத்தியூஸ் - திருக்குடும்ப கன்னியர்மடம்.

திருமதி ஏ. சிவாஞான சுந்தரம் - மகாஜனா கல்லூரி, திருமதி கே. சண்முகநாதன் - கோணாவில் இந்து வித்தி, திரு. ஆர். கயிலநாதன் - சாவகச்சேரி இந்துக் கல்லூரி, திரு. ஆர். சிவஞானசுந்தரம் கதிரிப்பாய் சுப்பிரமணிய வித்தி., திரு. எஸ். பாலசுப்பிரமணியம் - ஊரெழு கணேஷ வித்தி., திருமதி எஸ். கனகராசா - அச்சுவேலி ம. வி., திருமதி என். தாமோதரம்பிள்ளை - சாவகச்சேரி மகளிர் ம. வி., திரு. எம். சபாசிவம் - மட்டுவில் கமலாசனி வித்தி., திரு. எம். திருஞானசம்பந்தபிள்ளை - யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை திருபி எம். எப் அந்தோனி - சென் மேரி ஆர். சி. ம. வி.,

திரு. எஸ். தாசீசியஸ் - சென்மேரி ஆர். சி. ம. வி., திரு வி. சச்சிதானந்தன் - கல்வித்திணைக்களம், திரு. ரி. மகாசிவம் - வசாவிளான் ம. ம. வி., திரு. ரி. முத்துக்குமாரசாமி - நாவற்குழி, ம. வி., திரு. என். ஜெயநாகம் - யாழ்ற்ரன் கல்லூரி, திரு ஈ. கணேஷன் - மட்டுவில் தெற்கு சரஸ்வதி ம. வி., திரு. எஸ். கலாதரன் - நாரந்தனை. கணேஷ வித்தி., திரு. ஆர். சந்திரபாலன் - சங்கானை சிவப்பிரகாச, வித்தி., திரு. எஸ் செல்லையா - ஏழாலை ம. வி. திரு. எஸ் சிவலிங்கராசா - பத்தைமேனி இரத்தினேஸ்வரி. வி.

(கல்வித் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட உத்தியோக பூர்வ பட்டியலில் உள்ளவாறே பெயர்கள் பிரசுரிக்கப்பட்டுள்ளன.) (இ-6)

## உடற்கல்வி பாடத் திட்ட விசேஷ பயிற்சி வகுப்பு

யாழ்ப்பாணம், நவ. 7

யாழ். கல்வித் திணைக்கள உடற்கல்விப் பிரிவால், ஆண்டு 6 தொடக்கம் 11வரை உடற்கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான குறுகியகால பாடத்திட்ட விசேஷ பயிற்சி வகுப்புகளுக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்தப் பயிற்சி வகுப்புகள் காலை 9.00 மணிக்கு கோட்ட மட்டத்தில் பின்வரும் ஒழுங்கில் நடைபெறும்.

மருதனார்மடம் கோட்ட ஆசிரியர்களுக்கு, நவ. 12 ஆம் திகதி இராமநாதன் மகளிர் கல்லூரியிலும்: —

பண்டத்தரிப்பு கோட்ட ஆசிரியர்களுக்கு நவ. 13 ஆம் திகதி பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியிலும் —

வடமராட்சி கோட்ட ஆசிரியர்களுக்கு நவ. 15 இல் வேலாயுதம் மகாவித்தியாலயத்திலும்—

சாவகச்சேரி, கோட்ட ஆசிரியர்களுக்கு. நவ. 16 இல் சாவகச்சேரி இந்துக்கல்லூரியிலும் —

யாழ்ப்பாணம் கோட்ட ஆசிரியர்களுக்கு, நவ. 17 இல் யாழ். இந்து மகளிர் கல்லூரியிலும், —

வேலணைக் கோட்ட ஆசிரியர்களுக்கு. நவ. 18 இல் சேர். வைத்திலிங்கம் துரைச்சாமி ம. ம. வித்தியாலயத்திலும் பயிற்சி வகுப்பு நடைபெறும்.

ஆசிரியர்கள் தமக்கு வசதியான கோட்டங்களில் நடைபெறும் பயிற்சி வகுப்புகளில் கலந்துகொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

(இ - 6)

## பெப்ரவரியில் ஐ. நா. குழு

கொழும்பு, நவ. 7

ஐ. நா. மனித உரிமைக் கமிஷனின் தூதுக்குழு ஒன்று அடுத்த ஆண்டு பெப்ரவரி மாதத்தில் இலங்கைக்கு விஜயம் செய்ய உள்ளது.

பாதுகாப்பு துணை அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா இதனைத் தெரிவித்ததாக, அறிவிக்கப்பட்டது.

ஐரோப்பிய பொருளாதார சமூக அமைப்பின் இரண்டு பிரதிநிதிகள் கொழும்பில் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் இத்தகவல் தெரிவிக்கப்பட்டது. (அ-எ)

## நல்லூருக்கு இடம்மாற்றம்

யாழ்ப்பாணம், நவ 7

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் தலைமைப் பணிமனை நல்லூருக்கு தற்காலிகமாக இடம்மாற்றப்படவுள்ளது.

அண்மைக்காலத்தில் இலங்கை விமானப் படை மேற்கொண்ட தாக்குதலால் தலைமை பணிமனை பலத்த சேதமடைந்துள்ளது. (இ)

## பச்சிலைப்பள்ளி ஒய்வூதியர் கஷ்டம்

தென்மராட்சி, நவ. 7

பச்சிலைப்பள்ளிப் பகுதியில் ஒய்வூதியம் பெறுப்வர்களுக்கு கடந்த மூன்று மாத காலமாக ஒய்வூதியம் கிடைக்கவில்லை.

மூன்று மாதங்களுக்குரிய வவுச்சர்களும் காசோலைகளும் பளை கிராமிய வங்கிக்கு அனுப்பப்பட்டுள்ள போதிலும் வங்கியில் பணம் இல்லாததால் ஒய்வூதியம் வழங்கப்படவில்லை எனதெரிவிக்கப்படுகிறது. (இ-117)

# வி.பி. சிங்கை அரசியல் அந்தகாரத்துக்குள் அனுப்ப முயலும் இந்த சந்திரசேகர் யார்?

*ஜனதாதள் கட்சியை இரண்டாக்கிய திரு. சந்திரசேகரின் அரசியல் வாழ்வு பற்றிய ஒரு கண்ணோட்டம் இங்கு பிரசுரமாகிறது.*

1980இல் ஜனதா அரசை இரண்டாக்கிய சரண்சிங் போன்று —

1990 இல் ஜனதா தள் அரசை இரண்டாக உடைத்த இந்த சந்திரசேகர் யார்?

1989 நவம்பர் 26இல் நடந்த பொதுத்தேர்தலின் போது, ராஜீவ்காந்தியின் ஏஜண்டாக ஜனதா தள் கட்சியில் செயல்படுபவர் என்று சந்திரசேகர் மீது குற்றஞ்சாட்டப்பட்டது.

எதிர்க்கட்சியை உலுக்கும் வல்லமை படைத்த 'தனி மனிதன்' என்றும் அப்போது சந்திரசேகர் வர்ணிக்கப்பட்டார்.

திருபாய் அம்பானி என்ற வட இந்திய தொழிலதிபரின் நிதி உதவியுடன் ஜனதா தள் கட்சியை, ராஜீவின் ஆணைப்படி பலவீனப்படுத்தும் முயற்சியில் சந்திரசேகர் ஈடுபட்டிருக்கிறார்.

— இப்படி எல்லாம் 1989 தேர்தலின் போது குற்றஞ் சாட்டப்பட்ட சந்திரசேகருக்கு 40 வருடகால அரசியல் அனுபவம் உண்டு.

விஸ்வநாத் பிரதாப் சிங், ராஜீவ்காந்தி ஆகியோர் அரசியலுக்கு வருவதற்கு முன்னரே காங்கிரஸ் கட்சியில் சேர்ந்து அரசியலுக்கு வந்தவர் சந்திரசேகர்.

1980 இல் ஜனதா அரசு கவிழ்ந்ததைத் தொடர்ந்து, பிரதமராக இருந்த மொரார்ஜி தேசாய் அரசியலை விட்டு விலகினார்.

அதன் பின்னர், எதிர்க்கட்சித் தலைவர்களிலே பிரதமராகும் தகுதியை சந்திரசேகர் மட்டுமே பெற்றிருந்தார்.

கன்னியாகுமரியில் இருந்து காஷ்மீர் வரை அரசியல் பாத யாத்திரை ஒன்றை நடத்தி, தனது அகில இந்தியப் பார்வை' யை சந்திரசேகர் வளர்த்தார்.

எதிர்க்கட்சிகளின் நம்பிக்கை நட்சத்திரமாக விளங்கிய சந்திரசேகரின் வளர்ச்சிக்கு—

ராஜீவ்காந்தியின் அமைச்சரவையில் இருந்து வெளியேறி எதிர்க்கட்சி வரிசையில் சேர்ந்து கொண்ட வி. பி. சிங் ஒருவில்லனாக மாறினார்.

எதிர்க்கட்சி ஆட்சிக்கு வந்தால் அடுத்த பிரதமர் யார் என்ற கேள்விக்கு ''வி. பி. சிங்'' பதிலாக வந்தார்.

சந்திரசேகர் புறக்கணிக்கப்படத்தொடங்கினார். அவரின் பின்னால் அணி வகுத்தவர்கள் ஒவ்வொருவராக வி. பி. சிங்கின் பின்னால் செல்லத்தொடங்கினார்கள்.

வெறுப்புற்ற சந்திரசேகர், 'வி. பி. சிங் எனது தலைவர் அல்லர்' —என்று பகிரங்கமாகவே கூறத்தொடங்கினார்.

இதனால் ஜனதாதள் கட்சியின் உயர் மட்டத்தலைவர்கள் சந்திரசேகரை சந்தேகக் கண்ணோடு பார்க்கத் தொடங்கினர். [illegible] தொடர்ந்து, ராஜீவின் உசவாளி என்று சந்திரசேகர் மீது குற்றஞ் சாட்டப்பட்டது.

### பேட்டி

★ ராஜீவ்காந்தியின் ஏஜண்டாகத்தான் நீங்கள் ஜனதா தள் கட்சியில் இருந்து கொண்டு செயற்படுவதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளதே?

சந்திரசேகர்: ராஜீவ் காந்தி ஆட்சிக்கு வந்தபோது அவரை 'தேவதை' என்று புகழ்ந்தவர்கள் தான் பின்னர் எதிர்க்கட்சியில் சேர்ந்துகொண்டு 'பிசாசு' என்று அவரை தூற்றத் தொடங்கினார்கள்.

நான் ராஜீவை அன்று தேவதையாக வர்ணிக்கவுமில்லை; பின்னர் பிசாசு என்று அவரை தூற்றவும் இல்லை.

ஏழைகளின் பிரச்சினைகளை சரியாக உணர்ந்து கொள்ளமுடியாத மனிதனாக ராஜீவ் இருக்கிறார் என்பது தான் எனது குற்றச்சாட்டாக இருந்துவந்தது.

நான் எதிர்காலத்தை எண்ணிச் செயல்படுபவன்.

★ ஜனதா தள் கட்சியில் இருந்துகொண்டே பிரதமர் வி. பி. சிங்கை உங்கள் தலைவராக ஏற்றுக்கொள்ளமுடியாது என்று தொடர்ந்து கூறிவருகிறீர்களே?

சந்திரசேகர்: அதில் என்ன பிழை உண்டு? கட்சித் தலைவராக வி. பி. சிங் இருக்கலாம்; அதனால் அவரை எனது தலைவராக ஏற்றுக் கொள்ளமுடியாது. அப்படி அவரை ஏற்றுக்கொள்ளும்படி என்னை நிர்ப்பந்திக்கவும் முடியாது.

தலைவர் என்ற பதவியை வகிப்பது வேறு. மக்களின் தலைவராக விளங்குவது வேறு.

தனிப்பட்ட ஒருவரை, தலைவராக ஏற்றுக்கொள்ளும்படி ஏனையோரை கேட்டுக்கொள்வது அரசியல் அனுபவமின்மையைத்தான் குறிக்கும்.

மீண்டும் நான் கூறுகிறேன். வி. பி. சிங் எனது தலைவர் அல்லர்.

★ இந்திய அரசியலில் 'தனிநபர் வழிபாடு' நிலவுவதை எதிர்த்துவருகிறீர்களே?

சந்திரசேகர்: நாட்டின் சரித்திரத்தை தனிநபர்களால் மாற்றிவிடமுடியாது. நிகழ்வுகளால்தான் சரித்திரம்மாற்றி அமைக்கப்படுகிறது என்பது தான் எனது கருத்து.

இன்றைய அரசியல் தலைவர்கள் தங்களைப் பற்றியே பெருமை பேசிக்கொண்டிருப்பதைக் கேட்டு, கேட்டு சலித்துப்போய்விட்டேன்.

—இப்படி கூறுகின்ற திரு. சந்திரசேகர், பிரதமர் பதவியை எதிர்பார்த்து தனது அரசியல் நடவடிக்கைகளை அமைத்துவந்திருக்கிறார்.

அந்த எட்டாக்கனி, அவருக்கு இம்முறையாவது கிட்டுமா? இன்று நடக்கும் நாடாளுமன்றச் சிறப்புக் கூட்டத்தின் பின்னர்தான் இதுபற்றி எதுவும் தெரியவரும் என்பது அரசியல் நோக்கர்களின் கணிப்பு. (இ-எ)

### செய்திக்குப் பின்னால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வி. பி. சிங் அரசாங்கத்தின் தலைவிதி இன்று தெரியும்

புதுடில்லி, நவ. 7

இந்தியப் பிரதமர் வி. பி. சிங் தலைமையிலான அரசாங்கத்தின் தலைவிதி இன்று நாடாளுமன்றத்தில் நடைபெறும் நம்பிக்கை வாக்கெடுப்பில் முடிவு செய்யப்பட இருக்கிறது.

நம்பிக்கை கோரும் ஒருவரிப் பிரேரணை இன்று காலை 11 மணிக்கு விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரேரணை மீது விவாதம் நடத்த ஏழு மணி நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த நம்பிக்கை வாக்கெடுப்பில் வி. பி. சிங் அரசு வெற்றிபெறுவதற்கு வாய்ப்புகள் இல்லை என்று அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டிருப்பது தெரிந்ததே. (உ-எ)

# ராஜீவ் - சந்திரசேகர் இணைந்து செயல்பட முடிவு

புதுடில்லி, நவ. 7

ஜனதாதள் கட்சியின் தேவிலால் பிரிவுத் தலைவர் சந்திரசேகர் நேற்றுக் காலை இந்திரா காங்கிரஸ் தலைவரும் முன்னாள் பிரதமருமான ராஜீவ்காந்தியைச் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்தினார்.

ஒரு மணித்தியாலம் நடந்த பேச்சுக்களின் பின்னர் திரு. ராஜீவ்காந்தி செய்தியாளர்களிடம்– "இணைந்து செயல்பட இருவரும் இணங்கியுள்ளோம்" — என்று மட்டும் சொன்னார்.

"நாட்டை தற்போதைய நெருக்கடியில் இருந்து மீட்டெடுப்பதே எம் முன் உள்ள முதல் கடமையாகும்" என்றும் திரு. காந்தி சொன்னார்.

காங்கிரஸுடன் இணைந்து பணியாற்றுவதில் உடன்பாடு காணப்பட்டுள்ளதாகத் தெரிவித்த திரு. சந்திரசேகர், அது பற்றிய விவரங்களை வெளியிடவில்லை. (உ-எ)

## சந்திரசேகர் சந்திப்பு

புதுடில்லி, நவ. 7

ஜனதாதள் கட்சி தேவிலால் பிரிவுத் தலைவர் திரு சந்திரசேகர் நேற்று ஜனாதிபதி வெங்கட்ராமனைச் சந்தித்து 30 நிமிடங்கள் பேசினார்.

அதன்பின்னர் அவர் செய்தியாளர்களிடம் பேசுகையில்—

"மாற்று அரசு ஒன்றை அமைக்க என்னை அழைக்கும்படி நான் ஜனாதிபதியைக் கேட்கவில்லை" — என்று சொன்னார். (உ-எ)

## பாதுகாப்புப் பகுதியின்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வது '→' குறியினால் காட்டப்பட்டுள்ளது.

எல்லை விவரம் வருமாறு:-

மணிக்கூட்டுக் கோபுரம் → வேம்படி வீதி → இடதுபுறம் திரும்பி 3 ஆம் குறுக்குத் தெரு → அடைக்கலமாதா கோயிலுக்கு அருகே வலதுபுறம் திரும்பி ஆஸ்பத்திரி வீதி வழியே → இடதுபுறம் திரும்பி ரயில்நிலையவீதி → ரயில்நிலையத்துக்குச் சற்று முன்னால் இடதுபுறம் திரும்பி ரயில் நிலைய ஒழுங்கை → வலப்புறம் திரும்பி ரயில் நிலைய விடுதிகளுக்கும் பெற்றோலியக் கூட்டுத் தாபனத்துக்கும் ஊடாகச் சென்று — ஸ்ரான்லி வீதி இடது புறம் திரும்பி ஸ்ரான்லி வீதி வழியே ஆரியகுளம் பகுதி → ஆரியகுளத்தைச் சுற்றி வந்து வலது புறம் திரும்பி பருத்தித்துறை வீதி — பலாலி வீதி சந்திக்கும் இடம் → இடது புறம் திரும்பி சிறாம்பியடி ஒழுங்கை → (வலது புறம் திரும்பி, யாழ். வீதி → யாழ். வீதி ரயில் பாதையில் வந்து சேரும் இடத்தில் தனியார் வளவுகள் ஊடாகச் செல்கிறது.

அங்கிருந்து கன்னாதிட்டி வீதி → அதன் வழியே மணிக்கூட்டு வீதியைச் சற்றுக் கடந்து பின் இடது புறம் திரும்பி, தனியார் வளவுகள், சிறிய ஒழுங்கைகள் ஊடாக மக்கள் வங்கிக் கிளைக்கு அருகே ஸ்ரான்லி வீதியை வந்து சேருகிறது.

அங்கிருந்து வலது புறம் திரும்பி ஸ்ரான்லி வீதி வழியே → வின்ஸர் தியேட்டர் சந்தி → இடது புறம் திரும்பி கஸ்தூரியார் வீதி → நேராக நவீன சந்தைக்கு ஊடாக ஆஸ்பத்திரி வீதியில் ஏறி → அங்கிருந்து நேராக தனியார் வளவுகள், கட்டடங்கள் ஊடாக றீகல் தியேட்டர் பின் புறம் வருகிறது.

அங்கிருந்து → புல்லுக்குளத்தில் குளப் பகுதியைத் தவிர்த்து குளத்தின் கரையோரமாக அசோக் ஹோட்டல் பின் சுவர் → மணிக்கூட்டுக் கோபுரம் அடைகிறது. [அ-உ]

## மல்லாகம்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

தாசன் நவீனராசா (16 வயது) ஆகியோர் இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்தனர்.

மயானத்துக்கு அருகில் மற்றொரு பகுதியில் வீசப்பட்ட குண்டினாலும் சில வீடுகள் சேதமுற்றன.

ம. சாந்தநாயகி (17 வயது) என்பவரும் மற்றும் சிலரும் இச் சம்பவத்தில் காயமடைந்தனர்.

இதே வேளை—

திங்கள் இரவு கீரிமலைப் பகுதியை நோக்கி கடுமையான பீரங்கித் தாக்குதலும் நடத்தப்பட்டது. (ஒ-86-15-143-68


## கலை வர்த்தகக் கல்லூரி
## G. C. E. A/L 90, 91, 92
## இடமாற்றம்

நல்லூர் ஒவமன் றோட்டில் உள்ள
எஸ். பி. ஐயர் (ஆங்கில ஆசிரியர்) வீட்டில்
வகுப்புக்கள் யாவும் சனிக்கிழமை (10-11-90இல்)
மு. ப. 8.00 மணிக்கு வழமையான ஆசிரியர் குழுவினால்
ஆரம்பிக்கப்படவுள்ளன.

க. பொ. த. (உயர் தரம்) 90, 91, 92 மாணவர்கள்
யாவரும் சமுகமளிக்கவும்.

[சி-5381]


# மாநகரசபை மீண்டும் இயங்குகிறது

யாழ்ப்பாணம், நவ. 7

யாழ். மாநகரசபை அலுவலகக் கட்டடம் திருத்தப்பட்டு கடந்த திங்கள் முதல் அது இயங்கத் தொடங்கியுள்ளது.

யாழ். மாநகரசபைப் பகுதியில் பல தடவைகள் பொம்மர் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டதை அடுத்து, கடந்த நான்கு மாதங்களாக அது இயங்காதது தெரிந்ததே. (இ-3)

# நுண்கலைதுறை வகுப்புக்கள்

யாழ்ப்பாணம், நவ. 7

யாழ்ப்பாண பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைத்துறை வகுப்புக்கள் மருதனார்மட வளாகத்தில் நடைபெற்று வருகின்றன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)

# சிவாஜி திடீர் சுகவீனம்

சிங்கப்பூர், நவ. 7

தமிழ்நாடு ஜனதாதள் கட்சித் தலைவரும் பிரபல நடிகருமான சிவாஜி கணேசன் சிங்கப்பூரில் திடீர் சுகயீனமடைந்தார்.

உடனடியாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட அவரின் உடல் நிலை தேறிவருவதாக அறிவிக்கப்பட்டது.

சிங்கப்பூரில் நட்சத்திர இரவு நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொள்ள சென்ற இடத்தில் சிவாஜி கணேசன், மஞ்சள் காமாலை நோயினால் பீடிக்கப்பட்டார் என்றும் கடந்த திங்கள் அவர் உடல் நிலை மோசமாகியது என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ-எ)

# மிதிவெடியில் கால் இழப்பு

யாழ்ப்பாணம், நவ. 7

காக்கைதீவு — நாவாந்துறைப்பகுதியில் நீண்ட நாட்களுக்குப் பின்னர் தனது வீட்டைப் பார்க்கச் சென்றவர் வீட்டில் புதைத்து வைக்கப்பட்டிருந்த மிதிவெடியில் சிக்கி காலை இழந்தார்.

அரியபுத்திரன் அம்பிகைபாலன் (வயது 42) என்பவரே நேற்றுக் காலை வீட்டைப் பார்க்கச் சென்று படலையை திறந்து உள்ளே சென்றபோது முற்றத்தில் இருந்த மிதிவெடி வெடித்ததில் காலை இழந்தார். (உ-15)

# துர்க்காபுரத்தில் தபால் விநியோகம்

மல்லாகம், நவ. 7

காங்கேசன்துறை, தெல்லிப்பழைப் பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்தவர்களின் தபால்கள் துர்க்காபுரத்தில் இயங்கும் தபாலகத்தில் வைத்து விநியோகிக்கப்படுகின்றன. [ஒ-86]

# பயிற்சி நெறி

யாழ்ப்பாணம், நவ. 7

மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி முறைசாரக் கல்விப் பிரிவின் பயிற்சி நெறிகளான ஹோட்டல் முகாமைத்துவம், விவசாய விஞ்ஞானம் ஆகியவற்றுக்கான வகுப்புக்கள் எதிர்வரும் 12 ஆம் திகதி ஆரம்பமாக இருக்கின்றன. [ஒ]

# பனை - வீமன்காமம் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்தோர்

யாழ்ப்பாணம், நவ. 7

பனை – வீமன்காமம் கிராம சேவையாளர் பிரிவில் இருந்து இடம்பெயர்ந்தவர்கள் மல்லாகத்திலுள்ள அலுவலகத்தில் தமது நாலாம் கட்ட உலர் உணவு விநியோகத்துக்கான பெர்மிட்டுக்களைப் [illegible] எஸ். கலியுகவரதன் அறிவித்துள்ளார். (இ-3)

# வளர்த்த மாடு பாய்ந்து தாக்கியதில் படுகாயம்!

யாழ்ப்பாணம், நவ. 7

வளர்த்த மாடு பாய்ந்து மார்பில் குத்தியதால் ஒருவர் படுகாயமடைந்தார்.

கைதடி நவபுரம் என்ற இடத்தில் நேற்று முன்தினம் இச்சம்பவம் இடம்பெற்றது.

இச்சம்பவத்தில் சின்னவன் வேலன் (வயது–53) என்பவரே படுகாயமடைந்தார்.

மாட்டுக்குத் தண்ணீர் வைக்க இவர் சென்ற சமயம், எதிர்பாராத விதமாக மாடு கோபம் கொண்டு ஆக்ரோஷத்துடன் பாய்ந்து இவரைக் கொம்பினால் குத்தி மேலே தூக்கி அருகிலிருந்த வேலியுடன் சேர்த்து இடித்தது.

இதனால் மாட்டுச் சொந்தக்காரர் நெஞ்சில் படுகாயம் அடைந்தார்.

இரண்டாவது தடவையாகவும் மாடு இடிக்க முயன்றபோது அவர் ஒருவாறு தாக்குதலில் இருந்து தப்பிக்கொண்டார். (ஓ-15)

## ரூ. 2,000 கோடி நிதி கைவசம்:

# சமாதானம் வந்தால்தான் வடக்கு, கிழக்கு புனரமைப்பு

கொழும்பு, நவ. 7

வடக்கு – கிழக்கு மாகாண புனரமைப்பு, புனர்வாழ்வுப் பணிகளுக்கு என்று 50 கோடி அமெரிக்க டொலர் [சுமார் 2 ஆயிரம் கோடி ரூபா] நிதி உதவி கிடைத்துள்ளது. இப் பணத்தைச் செலவிடுவதற்கு, வடக்கு – கிழக்கு மாகாணத்தில் முதலில் சமாதானம் தோன்ற வேண்டும்.

ஜனாதிபதி பிரேமதாஸ வவுனியாவில் கடந்த திங்கட்கிழமை இப்படித் தெரிவித்தார் என்று கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

# புதிய மாணவர் சமுகம்

யாழ்ப்பாணம், நவ. 7

யாழ். பல்கலைக்கழகத்தில் முதலாம் வருட மாணவர்களுக்கான விரிவுரைகள் நேற்று ஆரம்பமாகின.

இதே வேளை —

'ராகிங்' நடைபெற்றதாக தமக்கு முறைப்பாடுகள் எதுவும் கிடைக்கவில்லை என்று பல்கலைக்கழக வட்டாரங்கள் உதயனுக்குத் தெரிவித்தன. [ஓ-6]

## ஆஸ்பத்திரி வலயத்தை...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

பெற்றுக்கொள்ளும். —

இந்த ஒழுங்கு விதிகளைக் கண்டிப்பாகக் கடைப்பிடிப்பதிலேயே, வடமாகாணத்தின் நோயாளருக்கும், காயமுற்றோருக்கும் மிகவும் தேவைப்படும் மனிதாபிமான உதவிகளைச் செய்வது தங்கி உள்ளது. சம்பந்தப்பட்ட பகுதியினர் இதனை உணர்ந்து இந்த ஒழுங்கு விதிகளின்படி ஒழுகுவார்கள் என்று செ. ச. ச. குழு நம்புகிறது— என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒழுங்கு விதிகளில் முக்கியமானவை வருமாறு:-

★ ஆயுதம் தாங்கிய எவரும் ஆஸ்பத்திரி வலயத்திற்குள் அனுமதிக்கப்படமாட்டார்கள்.

★ ஆஸ்பத்திரி வளவின் வாசலில் இராணுவ வாகனம் எதுவும் நிற்க அனுமதிக்கப்படமாட்டாது.

★ ஆஸ்பத்திரி வளவுக்குள் ஆஸ்பத்திரிக்கும், செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் செ.ச. சர்வதேசக்குழுவுக்கும் சொந்தமான வாகனங்களைவிட வேறு வாகனங்கள் எதுவும் அனுமதிக்கப்படமாட்டாது.

★ ஆஸ்பத்திரியைச் சூழ பாதுகாப்புப் பகுதி ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது –அந்தப் பகுதி தரையிலும் ஆகாயத்திலும் இருந்து பார்க்கும்போது துலக்கமாகத் தெரியக்கூடியதாக அடையாளம் இடப்படும்.

★ பிரஸ்தாப பாதுகாப்புப் பகுதியில் இராணுவத் தளங்களோ அல்லது அரசியல் தளங்களோ இருக்க முடியாது.

★ பாதுகாப்புப் பகுதியிலிருந்தோ அல்லது அதன் மீதோ இராணுவ நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளப்படக்கூடாது.

★ இந்தப் பகுதிக்குள் எந்தச் சந்தர்ப்பத்திலும் இராணுவ ஆளணியினரோ அல்லது இராணுவத் தளபாடங்களோ நிறுத்தப்படக்கூடாது.

★ பாதுகாப்புப் பகுதியில் தரையிலிருந்தோ வானத்தில் இருந்தோ எந்த ஆயுதமும் இயக்கப்படக் கூடாது.

★ பாதுகாப்புப் பகுதிக்குள் இருக்கும் ஆட்கள் மீதோ கட்டடங்கள் மீதோ வெளியிலிருந்து எவ்விதத்திலும் ஆயுதப் பிரயோகம் செய்யக் கூடாது. [அ]

## படகுகள் மீது...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

வர்கள் சிலர் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தில் சிலர் உயிரிழந்திருக்கலாம் என நம்பப்படுகிறது.

எனினும் உயிரிழந்தவர்கள் பற்றியோ, அந்தப் படகுகளில் பயணம் செய்தவர்களின் பிந்திய நிலை பற்றியோ எதுவும் இதுவரை தெரியவில்லை.

சம்பந்தப்பட்டவர்களின் உறவினர்கள் செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியை நாடி இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது இவ்வாறிருக்க, இந்தச் சம்பவத்தை திரித்து வானொலி, தொலைக்காட்சி ஆகியவை தமது செய்தி அறிக்கைகளில் –

அனலைதீவுக் கடலில் வைத்து புலிகள் பயணம் செய்த படகு ஒன்றை படையினர் தாக்கி அழித்தனர் என்றும் –

அதில் பயணம் செய்த 8 விடுதலைப் புலிகள் கொல்லப்பட்டனர்; மற்றும் சிலர் கைது செய்யப்பட்டனர் என்றும்

படகில் இருந்து ஏராளமான உணவுப் பொருட்கள் படையினரால் கைப்பற்றப்பட்டன என்றும் தெரிவித்தன. [ஒ-125]

## பணிப்பாளர்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

விவரங்கள் வருமாறு:-

★ வைத்தியசாலைக்குச் செல்ல நான்கு வாசல்கள் இருக்கும். இரண்டு வாசல்கள் பொதுமக்கள் பாவனைக்கும், மற்றைய வாசல் ஊழியர்கள் வேலைக்கு செல்லவும், நான்காவது வாசல் பிரேதங்களையும், குப்பைகளையும் வெளியே எடுத்துச் செல்லவும் பயன்படுத்தப்படும்.

★ நோயாளருடன் வரும் வாகனங்கள் வெளிநோயாளர் பிரிவுடன் திரும்பிவிட வேண்டும்.

★ பாதுகாப்பு பகுதியில் வாகனங்கள், மக்கள் செல்வது தடை செய்யப்படவில்லை. 2 3 வாகனங்களில் ஆயுதபாணிகள் செல்லலாம். ஆனால் கூடுதல் வாகனங்கள் ஒரே நேரத்தில் செல்வது தடைசெய்யப்பட்டுள்ளது இரண்டு மூன்று ஹெலிகள் தேவை கருதிப் பறந்து செல்லலாம்.

★ வைத்திய சாலையில் நோயாளரை அனுமதிக்கும் பகுதியில் செஞ்சிலுவைத் தொண்டர்கள் கடமை புரிவர். [அ-3]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 07 - 11 - 1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org